## மடு, மாந்தை கல்விக் கோட்டங்கள் இணைந்து நடாத்தும்
# முதலாம் தவணைப் பரீட்சை – 2017

| தரம் : 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 1.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ........................................................ | |

### பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01. சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01. “தண்டேன் நுகரா மண்டுகம்.....” மண்டுகம் என்பதன் ஒத்தசொல்
 1. மீன் 2. ஆமை 3. தவளை 4. முதலை

02. நித்திலப் புன்னகை சுடர் வீசிட .......... இங்கு நித்திலம் என்பதன் ஒத்தசொல்
 1. வானம் 2. பூமி 3. முத்து 4. காற்று

03. “எள் துணையானும் இரவாது ஈதல்” ஈதல் என்பதன் எதிர்ச்சொல்
 1. கொடுத்தல் 2. ஒறுத்தல் 3. கொடை 4. ஈகை

04. விதியை நோவர் தன் நண்பரைத் தூற்றுவர். தூற்றுதல் என்பதன் எதிர்ச்சொல்
 1. சபித்தல் 2. போற்றுதல் 3. புகழ்தல் 4. சாற்றுதல்

05. அரசர் காட்டில் ஒரு வேடனைக் கண்டார். வேடன் என்பதன் எதிர்ப்பாற்சொல்
 1. வேடத்தி 2. வேடவித்தி 3. வேடுவிச்சி 4. வேடச்சி

06. அணில் கீச்சிடும் என்பது போல கரடி
 1. உறுமும் 2. கத்தும் 3. சீறும் 4. பிளிறும்

07. பனையின் இளையது வடலி போல கமுகின் இளையது
 1. கன்று 2. குட்டி 3. நாற்று 4. பிள்ளை

08. ஒருவர் தானே தன்னைப் பற்றி எழுதும் வரலாறு
 1. சிறுகதை 2. சுயசரிதை 3. நெடுங்கதை 4. புனைந்துரை

09. ‘பங்கஜம்’ என்னும் வடசொல்லைக் குறிக்கும் தமிழ்ச்சொல்
 1. மல்லிகை 2. கனகாம்பரம் 3. குமுதம் 4. தாமரை

10. கணவனை இழந்த மனைவி குழறிக் குழறி அழுதாள். இதில் குழறிக் குழறி என்னும் தொடர்
 1. இணைமொழி 2. அடுக்குத்தொடர் 3. இரட்டைக்கிளவி 4. அடைமொழி

11. தகவல் தொடர்பாடலில் Internet (இன்ரநெற்) பங்கு வகிக்கிறது. பக்ஸ் என்பதன் தமிழ்ச்சொல்
 1. இணையம் 2. வையகவிரவுவலை 3. வலைத்தளம் 4. மின்வாணிபம்

12. விஞ்ஞானத் தொழிநுட்ப வளர்ச்சியின் வரப்பிரசாதங்களில் ஒன்று கம்பியூட்டர் ஆகும். கம்பியூட்டர் என்பது

1. ஒல்லாந்து மொழி 2. ஆங்கில மொழி 3. தெலுங்கு மொழி 4. கன்னட மொழி

13. சும்மாடு என்பது எப்பிரதேச வழக்குச்சொல்

1. வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு 4. தெற்கு

14. ஆதவன், கதிரோன், அருக்கன் எனும் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்

1. சந்திரன் 2. விண்மீன் 3. சூரியன் 4. ஆகாயம்

❖ **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

15. மேலெழுந்த வாரியாகக் கற்றல் எனும் பொருள் தரும் மரபுத்தொடர்

1. நுனிப்புல் மேய்தல் 2. தலையால் நடத்தல்
3. துறை போதல் 4. கடைத்தேறுதல்

16. பொறாமை கொள்ளுதல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்

1. வயிறு எரிதல் 2. வயிறு கடித்தல் 3. வயிற்றிலடித்தல் 4. வயிற்றைக்கட்டுதல்

17. அழுத பிள்ளை பால் குடிக்கும் எனும் பழமொழியின் கருத்து

1. முயற்சி செய்பவன் நன்மை அடைவான்
2. வேளா வேளைக்குப் பிள்ளைக்கு பால் கொடுத்தல் வேண்டும்
3. மிக வருந்தி முயற்சி செய்தல் நன்று
4. அழாத பிள்ளைக்கு தாய் பால் கொடாள்.

18. அறிவிற் சிறந்த எந்தப் பெரிய மேதையும் சில சமயங்களில் பிழை விடுவதுண்டு. என்னும் கருத்தை உணர்த்தும் பழமொழி

1. ஆனைக்கும் அடி சறுக்கும்
2. ஆழம் அறியாமல் காலை விடாதே
3. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
4. துள்ளின மாடு பொதி சுமக்கும்

19. கொடியவர்க்குச் செய்யும் உதவி எவ்வகைப் பயனையும் தராது என்னும் பொருளை விளக்கும் உவமைத்தொடர்

1. பாம்புக்கு பால் வார்த்தது போல
2. விழலுக்கு இறைத்த நீர் போல
3. சூரியனைக் கண்ட பனி போல
4. வெளி வேடத்தைக் கண்டு மயங்குவது போல

20. கண்ணன் நன்கு படிப்பான். இவ் வாக்கியம்

1. கலப்பு வாக்கியம் 2. தனி வாக்கியம் 3. கூட்டு வாக்கியம் 4. கதம்ப வாக்கியம்

21. “நாளைக்கு நான் யாழ்ப்பாணம் செல்வேன்” என அண்ணா கூறினார். இவ் வாக்கியத்தில் வந்துள்ள தலைமைத்தொடர்

1. அண்ணா கூறினார்
2. நாளைக்கு நான் யாழ்ப்பாணம் செல்வேன்
3. யாழ்ப்பாணம் செல்வேன்
4. அண்ணா

22. தண்டேன் என்பதைப் பிரித்தெழுதினால்

1. தண்டு + ஏன் 2. தண் + டேன் 3. தண்மை + ஏன் 4. தண்மை + தேன்

23. நாவலர் வயித்து வலியால் துடித்தார். வயித்துவலி என்பதன் திருத்திய வடிவம்

1. வைத்துவலி 2. வயிற்றுவலி 3. வைற்றுவலி 4. வையித்துவலி

24. பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் காட்டப்பட்ட சொற்கூட்டம்

1. கலாசாரம், நாகரிகம், பாகல்காய், முயச்சி
2. கலாச்சாரம், நாகரிகம், பாகற்காய், முயர்ச்சி
3. கலாசாரம், நாகரிகம், பாகற்காய், முயற்சி
4. கலாசாரம், நாகரீகம், பாகற்காய், முயற்சி

25. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சியாக வந்த சொல்

1. பூங்கொடி 2. மரவேர் 3. கடற்கரை 4. தேனருவி

26. பின்வருவனவற்றுள் உயிர், மெய், நெடில் எழுத்துக்கள்

1. ஆ, ஈ, ஏ 2. அ, இ, உ 3. க, கு, கெ 4. கா, கீ, கூ

27. கருணையுள்ள மனம் என்பது

1. தனிப்பெயரடை 2. வினையடை 3. தனிவினையடை 4. ஆக்கப்பெயரடை

28. நளனோடு தமயந்தி சென்றாள். ஓடு என்பது

1. கருத்தாப் பொருள் 2. கருவிப் பொருள்
3. வரையறைப் பொருள் 4. உடனிகழ்ச்சிப் பொருள்

29. நன் + நூல் என்பதைச் சேர்த்து எழுதினால்

1. நன்னூல் 2. நந்நூல் 3. நன்நூன் 4. நந்னூல்

30. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் அமையாத சொற்கூட்டம்

1. இலை, ஈட்டி, உறி, ஊதல் 2. நிலம், நீலம், நுங்கு, நூபுரம்
3. கரகம், சட்டி, தட்டி, ஞமலி 4. தங்கம், பட்டம், மரம், வண்ணம்

❖ **இடைவெளியைப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.**

31. மாணவர்களின் கல்விக்கு ஆலய ...................... கை கொடுக்க முன்வருவது பாராட்டுக்குரியதாகும்.

1. நிருவாகம் 2. நிறுவனம் 3. கட்டடம் 4. உண்டியல்

32. தெற்காசிய பிராந்திய .................... நாடுகளின் பதினைந்தாவது மாநாடு இலங்கையில் நடைபெற்றது.

1. பிரச்சினை 2. ஒத்துழைப்பு 3. போரிடும் 4. ஒத்துழையாமை

33. மூன்று இளைஞர் இணைந்து ................................ மதுபான விற்பனைக்கு எதிராக தற்துணிவோடு சுவரொட்டிப் பிரசுரங்களில் ஈடுபட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

1. தென்னம் 2. இரவு 3. சட்டவிரோத 4. பனம்

34. வங்கி முகாமையாளரின் அனுமதியுடன் காசாளர் ........................... மாற்றிப் பணத்தைத் தந்தார்.

1. அஞ்சற் கட்டளையை 2. காசுக்கட்டளையை
3. பணம் பெற்ற சிட்டையை 4. காசோலையை

35. நூல் வெளியீட்டு விழாவில் .................................... நடாத்த வருமாறு பேராசிரியருக்கு அழைப்பு வந்தது.

1. கருத்தரங்கு 2. திறனாய்வு 3. கவியரங்கு 4. சொற்பொழிவு

36. மாணவர்களோடு சேர்ந்து ஆசிரியரும் சிரமதானத்தில்..............................

1. ஈடுபட்டனர் 2. ஈடுபட்டார்கள் 3. ஈடுபடுவர் 4. ஈடுபட்டார்

37. இன்று ஜனாதிபதி தலைமையில் கூடும் அமைச்சரவை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக விரிவாக ....................................

1. ஆராய்ந்தது 2. ஆராய்ந்தார்கள் 3. ஆராயவுள்ளது 4. ஆராய்வார்கள்

38. நாங்கள் எல்லாத் திக்குகளிலும் சிதறி

1. ஓடினான் 2. ஓடியது 3. ஓடினோம் 4. ஓடினார்கள்

39. அந்தப் பசுமையான நாட்களை எண்ணியெண்ணி உள்ளம்

1. வருந்தினர் 2. தெளிந்தனர் 3. பூரித்தனர் 4. மறந்தனர்

40. ஒழுங்குமுறைப்படி எழுதுக.

அ. வெள்ளம் கரைபுரண்டு ஓடியது

ஆ. இரவு முழுவதும் மழை பெய்து கொண்டிருந்தது

இ. பள்ளங்களில் நீர் தேங்கி நின்றது

ஈ. காலைக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் நீரில் பட்டு மடியும் காட்சி அழகாக இருந்தது.

1. ஈ, இ, ஆ, அ 2. அ, இ, ஆ, ஈ 3. இ, ஈ, ஆ, அ 4. ஆ, அ, இ, ஈ

(40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

மடு, மாந்தை கல்விக் கோட்டங்கள் இணைந்து நடாத்தும்

# முதலாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ........................................................ | |

## பகுதி II

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **சுருக்கமான விடை எழுதுக.**

**01.** 1. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
"நீரெடுத்து வருவதற் கவள்மணி"

2. வலி, வளி என்னும் சொற்களின் கருத்துபுலப்பட தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.
3. தொழில் முறைக்கடித உறுப்புக்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக.
4. வாக்கியத்தின் பிரதான உறுப்புக்கள் எவை?
5. விளம்பரம் செய்வதற்கான நோக்கங்கள் எவை?
6. i. மொழியின் இருவடிவங்களைக் குறிப்பிடுக.
ii. பேச்சு மொழியின் இருவடிவங்களையும் தருக.
7. ரவி பாடுவான், ரவி ஆடுவான் இவ் வாக்கியங்களை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருத்தமான இணைப்பிடைச்சொல் யாது?
ஆகவே, எனினும், உம், அல்லது
8. i. அடைமொழி வகைகள் எவை?
ii. தனிப்பெயரடைக்கு உதாரணம் தருக.
9. i. வடசொல் என்றால் என்ன?
ii. தமிழில் வழங்கும் வடமொழிற் சொற்களின் இரண்டு வகைகளும் எவை?
10. துண்டுப்பிரசுரம் ஒன்றை எழுதும் போது பின்வருவனவற்றில் தவிர்க்க வேண்டியவை எவை?
கவர்ச்சியான தலைப்பு, விடயத்தை விரித்து கூறல், முடிப்பு, உள்முகவரி, விளிப்பு

**(20 புள்ளிகள்)**

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ. தொடர்ச்சியான யுத்தம் நமது நாட்டினை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றது. என்பது மறக்க முடியாத உண்மை. நாட்டின் அபிவிருத்திக்கும் சகல துறைகளின் முன்னேற்றத்திற்கும் சமாதானத் தீர்வே அவசியம் எனப் பல அறிஞர் காண்கின்றனர் என்பதை விளக்கி விளக்க கட்டுரை.

ஆ. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்பார்கள். இத்தகைய சிறப்புடைய மூத்தோர் எமது சொத்துக்களே ஆவர். இன்று மூத்தோரை மதித்தலும் அவர்களைப் பாதுகாத்தலும் அருகிக் கொண்டே வருகின்றது. நம்மவர்கள் சுயநலனுக்காக மூத்தவர்களை இன்று முதியோர் இல்லங்களில் இணைக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு முதியோர் தின விழாவில் நீர் ஆற்றும் சொற்பொழிவு.

இ. தொலைக்காட்சி பார்ப்பதனால் ஏற்படுகின்ற சாதக பாதகம் பற்றி இரு நண்பர்களுக்கிடையேயான உரையாடல்.

ஈ. "தாயிற் சிறந்த கடவுளுமில்லை." எனும் பொருள்பட தாய்மையின் உயர்வை விளக்கி சிறுகதை எழுதுக. **(25 புள்ளி)**

**03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 15 - 20 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.**

மக்களின் வாழ்நாள் சில. அவர்களின் அறிவும், சிறிதே. அக்குறுகிய ஆயுட்காலத்திற் பிணியோ பல. ஆனால் கல்வியே கரையில்லாதது. ஆதலின் எல்லா நூல்களையும் கற்றல் இயலாது. அன்னப் பறவையிடத்துப் பாலையும் நீரையும் கலந்து வைப்பின் அது நீரைப் பிரித்து நீக்கிப் பாலைப் பருகுமாம். அது போல நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருளை உணர்த்தும் நூல்களையே கற்றல் வேண்டும். கற்றற்குரிய நூல்களை நல்லாசிரியரிடத்துச் சென்று கற்க வேண்டும்.

**04. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பழைய தமிழ் நூல்களை முன்னோர் பனை ஓலைகளில் எழுதி வைத்தனர். அக்காலத்தில் இக்காலத்தைப் போன்ற எழுது கருவிகள் இல்லை. முற்காலத்தில் புலவர்களிடம் நூல்கள் ஓலைச்சுவடிகளாக இருக்கும். வேண்டிய நூல்கள் எல்லாம் ஒரு புலவரிடம் கிடைப்பதருமை. சிலரிடம் சில நூல்கள் தான் இருக்கம். அவர்கள் அவற்றை எளிதில் பிறருக்குக் கொடார். ஏனெனில் நூலை எழுதவோ, எழுதுவித்தலோ மிகவும் கடினமான செயலாகும். புலவரின் சந்ததியார் கல்லாதவராயின் ஓலைச்சுவடிகள் பரண் மீதேறும் அங்கிருந்து எடுப்பாரின்மை யினால் மடிந்து போதலும், செல்லரித்தலும் உண்டு. மூவேந்தர்களும், வள்ளல்களும், இறந்த பின்பு, தமிழ்நாடு நிலைபெற்ற அரசாட்சி இன்மையால் சீர்குலைந்தது. தமிழ் வளர்ச்சி குன்றியது.

1. முன்னோர் நூல்களை எவற்றில் எழுதி வைத்தனர்?
2. யாரிடம் இருந்த ஓலைச்சுவடிகள் பரண் மீது வைக்கப்பட்டன?
3. பரண் மீது வைக்கப்பட்டவைக்கு யாது நிகழ்வுறும்?
4. பின்வருவனவற்றிக்கு பொருள் தருக?
   1. சந்ததியார், செல்
5. தமிழ் நாட்டு அரசாட்சி ஏன் சீர்குலைந்தது? (10 புள்ளிகள்)

05. 'டெங்கு நோயைத் தடுப்போம்' என்ற தலைப்பில் ஒரு துண்டுப்பிரசுரம் எழுதுக. (15 புள்ளிகள்)

மடு, மாந்தை கல்விக் கோட்டங்கள் இணைந்து நடாத்தும்

# முதலாம் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ........................................................ | |

## பகுதி III

- ❖ ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ **1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

**01. சுருக்கமான விடை தருக.**

1. "எடுத்துக் கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை"
   அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?
   ஆ. 'பிள்ளை' என்று இங்கே குறிப்பிடப்படுபவரின் முழுப்பெயர் யாது?

2. "தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம் வண்டோ"
   அ. தண் என்பதன் பொருள் யாது?
   ஆ. நுகரா என்பதன் பொருள் யாது?

3. அடக்கமுடையாரின் இயல்பு யாது?

4. அ. நாலடியார் என்ற நூலைத் தொகுத்தவர் யார்?
   ஆ. நாலடியார் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?

5. அ. திரிகடுகம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
   ஆ. 'திரிகடுகம்' குறிக்கும் மூன்று பொருட்கள் யாவை?

6. அ. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?
   ஆ. இக்கட்டுரை எந்நூலிலிருந்து எடுக்கப்பட்டது?

7. "பாரதியார் சுயசரிதை" என்ற பாடல்களுள் 'பிள்ளைக்காதல்' என்ற தலைப்பில் எத்தனை பாடல்கள் உள்ளன?

8. அ. இலங்கை சட்டசபைக்கு நியமனம் பெறுவதற்காக போட்டியாளராக விளங்கியவர்கள் யாவர்?
   ஆ. இந்நூலுக்கு இனியவை நாற்பது என்னும் பெயரிடக் காரணம் யாது?

9. "பென்னாகமும் நாகமும் நண நடந்தார்" இதில் நாகம் என்பதன் இரு பொருளையும் தருக.

(20 புள்ளிகள்)

**02. பின்வரும் செய்யுட்பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினையும் வாசித்து அவற்றின் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

அ. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.

i. இச் செய்யுளில் கூறப்படும் நீதிக்கருத்துக்கள் எவை?
ii. எட்டுணை! என்பதன் பொருள் யாது?

ஆ. அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

i. இப்பாடலில் வந்துள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

ii. இப்பாடலில் வந்துள்ள உரிச்சொல்லைக் குறிப்பிடுக.

இ. நாவலர் அவர்களின் நிலை கம்பீரமான தோற்றம். வீறு கொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம் இவற்றை வருணிக்க அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. "அது கிடக்க எடுத்துக்கொண்டு வா தந்தி தபாற்கட்டுக்களை" என்றார் நாவலர் அவர்கள். எல்லோரும் பிரமித்துப் போனார்கள்.

i. இவ்வுரைப் பகுதியில் நாவலரின் தோற்றம் எவ்வாறு கூறப்படுகிறது.
ii. எல்லோரும் ஏன் பிரமித்துப் போனார்கள்?

ஈ. வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தின் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகில் திண்டுத்தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும் மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங்கைகளினால் நெற்றிகளைத் தாங்கிக் கொண்டு கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருக்கிறார். அன்றைய கூட்டத்திற்கு தலைமை தாங்க வேண்டிய அவர் தனக்கு ஏற்பட்ட காசநோயால் பீடிக்கப்பட்டு இருக்கிறார்.

i. இவ்வுரைப்பகுதியின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது என்ன?
ii. ஆறுமுகநாவலர் எதனை அவதானித்துக் கொண்டிருந்தார்?

(4 x 5 = 20 புள்ளிகள்)

03. விவேகசிந்தாமணி, வாக்குண்டாம், இனியவைநாற்பது என்ற நீதிப்பாடல்களின் ஊடாக அறிவுடையோரின் இயல்புகள் எவ்வாறு கூறப்படுகிறது ஆராய்க.

(15 புள்ளிகள்)

04. அ. 'பாரதியார் சுயசரிதை' என்ற பாடத்தில் பெண் மீது வைத்த காதல் உணர்வு எவ்வாறு காட்டப்படுகிறது.
ஆ. தாம் விரும்பியவற்றைப் பெறாதவர்கள் எனப் பாரதியார் காட்டுவோர் யாவர்?

(15 புள்ளிகள்)

05. நாலடியார் 'யானை அனையவர் நண்பொரீஇ' என்ற பாடலை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக.

அ. யானை போன்றவர்களின் நட்பு எத்தகையது எனக் கூறப்பட்டுள்ளது?
ஆ. நாயைப் போன்றவர்களின் நட்பு எத்தகையது எனக் கூறப்பட்டுள்ளது? (10 புள்ளிகள்)

06. அ. 'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரையில் வை. விஸ்வநாதப்பிள்ளை எவற்றில் சாமர்த்தியம் உடையவர்?
ஆ. நாவலரின் திறமை, நேர்மை காட்டப்படும் விதத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

07. அ. "கணக்காயர் இல்லாத ஊரும்" என்ற பாடலில் இடம்பெற்றுள்ள ஒருவனுக்கு நன்மை பயக்காத விடயங்கள் எவை?
ஆ. உடலுக்கு சுகமளிக்கும் மருந்துச் சரக்குகள் மூன்றையும் தருக. (10 புள்ளிகள்)

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page